**"என்னால் கட்டணத்தை தொகையை செலுத்த இயலவில்லை என்றால் என்ன செய்வது?"**

உங்களின் கோபேகள், இணைக்காப்பீடு அல்லது விலக்கு செலுத்த இயலாத சூழலில் உங்கள் குடும்பம் ஆரம்ப தலையீட்டுச் சேவையை மறுக்காமல் இருக்கலாம். உங்களால் கட்டணம் செலுத்த இயலாது என்பதை நீங்கள் இந்த படிவத்தை நிரப்புவன் மூலம் முடிவு செய்யலாம். உங்களால் கட்டணம் செலுத்த இயலும் என்று நாங்கள் முடிவு செய்தால் முழுவதையும் செலுத்தவதற்கு நீங்கள்தான் பொறுப்புடையவர்கள் உங்கள் FRC மற்றும் சேவை வழங்குநர் இந்த செயல்பாட்டில் உங்களுக்கு உதவி செய்வார்

குடும்ப வருமானம் அல்லது செலவில் மாற்றம் வருகின்ற எந்த நேரத்திலும் அவர்களுடைய கோபே, இணைக்காப்பீடு, விலக்கு அல்லது மாத குடும்ப கட்டணம் செலுத்தும் திறனில் மறுமுடிவு எடுக்க ஒரு குடும்பம் கோரலாம்.

ஒரு குடும்பம் கோபே, இணைக்காப்பீடு, விலக்குகள் அல்லது குடும்ப மாத கட்டணம் போன்றவற்றை 90 நாட்களுக்கு மேலாக செலுத்தாமல் இருந்தால் EI திட்டம் IFSP சேவைகளை EI திட்டத்துடன் பணம் செலுத்துவதற்கான திட்டம் வகுக்கப்படும்வரை நிறுத்தி வைக்கலாம்.

***ஆரம்ப தலையீட்டுச் சேவைகளுக்காக கட்டணச் செலவுகளை என்னுடைய காப்பீடு கொண்டிக்கிறது என்று நான் நினைக்கிறேன்.***

சில சுகாதார காப்பீடு திட்டங்கள் EI சேவைகளைக் கொண்டிருக்கும் மற்றவைகள் கொண்டிக்காது. உங்கள் குழந்தைகளுக்கு IFSP சேவைகள் ஏதாவது இருந்தால் EI திட்டம் உங்கள் குடும்பத்தின் செலவின பங்கேற்பை முடிவு செய்ய உங்களுடன் தனித்தனியாக வேலை செய்யும். அனைத்து தகுதியுள்ள குழந்தைகளும் சேவைகளைப் பெறுவதற்கு குடும்ப செலவின பங்கேற்ப்பு (FCP) அவசியம்.

**கேள்விகள் அல்லது கவலைகள்?**

குடும்ப செலவின பங்கேற்பு (FCP) அல்லது ஆரம்ப தலையீட்டுச் சேவைகள் பற்றிய உங்கள் எந்த கேள்விகளுக்கும் உங்கள் ஆரம்ப தலையீட்டுத் (EI) திட்டத்தின் திட்ட இயக்குநர் பதில் சொல்பவராக இருக்க வேண்டும்.



உங்கள் குடும்ப வளங்கள் ஒருங்கிணைப்பாளர் (FRC):

தொலைபேசி:_______________________

திட்டம்:_________________________

# வாஷிங்டன் ஆரம்பத் தலையீட்டுச் சேவைகள்

குடும்ப செலவின பங்கேற்ப்பு (FCP)

Department of Early Learning
Early Support for Infants and Toddlers (ESIT)
P.O. Box 40970
Olympia, WA 98504-0970
தொலைபேசி: 360.725.3500

Washington State Department of Early Learning

Early Support for Infants and Toddlers

DEL 11-019d (8/13)

Family Cost Participation- Tamil

# வாஷிங்டன் ஆரம்பத் தலையீட்டுச் (EI) சேவைகள்

***ஆரம்பத் தலையீட்டுச்** (EI) **சேவைகளுக்கு என்ன செலவு ஆகும்**.*

உங்களை குழந்தையின் EI சேவைகளுக்கு என்ன செலவு ஆகும் என்பதை முன்பாகவே தெரிந்துகொள்வதற்கு வாய்ப்பு இல்லை. ஆரம்பத தலையீட்டு சேவையில் கலந்துகொள்வதன் விளைவாக உங்கள் குழந்தைக்கு என்ன நிகழவேண்டும் என்று நீங்கள் விரும்புகின்றீர்கள் என்பதை உங்களுடன் பேசி முடிவு செய்யும்வரை இந்தத் தகவல் எங்களுக்கு தெரியாது. உங்கள் குடும்பத்தின் முன்னுரிமைகள், வளங்கள், கவலைகள் மற்றும் உங்கள் குழந்தையின் தேவை போன்றவற்றின் அடிப்படையில் உங்கள் குடும்பம் மற்றும் குழந்தை சேவைகளைப் பெறுகின்றார்கள். இவைகளை நீங்கள் மற்றும் உங்களுடன் வேலை செய்யும் குழு முடிவு செய்ய வேண்டும். ஆரம்ப தலையீட்டுச் சேவை என்பது ஒவ்வொரு குழந்தைக்கும் குடும்பத்திற்கும் தனிப்பட்டது.



***இந்தச் சேவைகளுக்கு செலவு செய்ய வேண்டுமா**?*

குறைபாடுடைய தனிநபர் கல்விச் சட்டத்தின் (IDEA) பகுதி C என்பது ஒரு கூட்டாச்சிச் சட்டம் அது ஆரம்பத் தலையீடு சேவைகள் (EI) எவ்வாறு வழங்கப்படுகிறது என்று வழிகாட்டுகிறது. IDEA சில EI சேவைகளுக்கு குடும்ப செலவின பங்கேற்பை அனுமதிக்கிறது. குடும்பத்தின் பொது அல்லது தனியார் காப்பீட்டுப் பயனில் FCP உள்ளடங்கியுள்ளது. சில சூழ்நிலைகளில் FCP குடும்பத்தின் கட்டணத்தையும் உள்ளடக்கியிருக்கலாம்.

*"**நான் சேவைகள் இலவசம் என்று நினைத்தேன்**"*

IDEA-இன் பகுதி C சில EI செயல்பாடுகள் உங்கள் குடும்பத்திற்கு இலவசமாக வழங்கப்படுகிறது என்று கூறுகின்றது. அந்தச் செயல்பாடுகள்

- குழந்தை கண்டுபிடித்தல் (EI தகுதியுள்ள குழந்தைகளை கண்டுபிக்க).
- மதிப்பீடு மற்றும் மதிப்பாய்வு (ஒரு குழந்தை EI க்கு தகுதியுடையவரா என்பதை தீர்மானிக்க).
- சேவை ஒருங்கிணைப்பு (குடும்பங்களுக்கான வளங்களைக் கண்டுபிடிக்கும் நடவடிக்கைகள்).
- தனிப்பட்ட குடும்ப சேவைத் திட்டம் (IFSP) குடும்பத் திட்டத்தின் வளர்ச்சி மற்றும் மதிப்பீடுகள்.
- குடும்ப உரிமைகள் (செயல்முறை பாதுகாப்பு மற்றும் ஒழுங்கு செயல்முறை என அழைக்கப்படுகிறது).

*"**செலவு இருக்கும் என்று எனக்கு எப்படித் தெரியும்**?"*

சேவைக்கான எந்தவொரு கட்டணமும் இருந்தால், அதனை முடிவு செய்ய நீங்கள் நிரப்பும் படிவம் உங்களுக்கு உதவும். உங்கள் பொது அல்லது தனியார் காப்பீட்டைப் பயன்படுத்துவதற்கு நீங்கள் ஒப்புதலளிக்கிறீர்கள் என்றால் மற்றும் உங்கள் கோபே, இணைக்காப்பீடு மற்றும் விலக்குகள் ஆகியவற்றைச் செலுத்த ஒப்புக்கொண்டால், நீங்கள் எந்தவொரு நிதி தகவலையும் வழங்க வேண்டியதில்லை. உங்கள் கோபே, இணைக்காப்பீடு மற்றும் விலக்குகளை உங்களால் செலுத்த முடியவில்லையென நினைத்தால், சேவைகளுக்கான எந்த செலவும் இருப்பின், அதனை முடிவு செய்ய நிதி தகவல்கள் கொடுக்கப்பட வேண்டும்.

*"**என் வருமானம் அல்லது சுகாதாரக் காப்பீட்டைப் பற்றிய தகவல்களை நான் கொடுக்கவில்லை என்றால் என்னாகும்**?"*

தங்கள் வருமானத்தைப் பற்றிய தகவல்களை வழங்காமல் இருக்க அல்லது திட்டம் பொது அல்லது தனியார் சுகாதாரக் காப்பீட்டில் கட்டணத்தை வசூலித்துக்கொள்ள அனுமதிக்க குடும்பத்திற்கு உரிமை உண்டு. நீங்கள் உங்கள் வருமான தகவல்கள வழங்கவில்லை எனில், மருத்துவ உதவி (தகுதி இருந்தால்) அல்லது திட்டம் உங்கள் காப்பீட்டில் கட்டணத்தை வசூலிக்க விண்ணப்பித்தால், குடும்ப செலவின பங்கேற்பு (FCP) அடிப்படையில் சேவைகளை வழங்குவதற்கு மாதாந்திர குடும்ப கட்டணத்தை உங்கள் குடும்பத்தின் அளவு மற்றும் வருவாய்க்கு ஏற்ப நீங்கள் செலுத்த வேண்டும்.

சாத்தியமான குடும்ப செலவுகள் குறித்த மேலும் விரிவான தகவல்கள் கட்டண முறை மற்றும் கட்டணக் கொள்கைகள் முறையில் கொடுக்கப்பட்டிருக்கின்றன அதனைக் குடும்ப விவகாரங்கள் ஒருங்கிணைப்பாளர் (FRC) உங்களுக்கு கொடுப்பார்.

**குடும்ப வருமானம் மற்றும் செலவுத் தகவல் இரகசியமானது. இது எழுத்துப்பூர்வமான அனுமதியின்றி வேறு எந்த திட்டத்திற்கும் (பொது அல்லது தனியார்)**

*"**இன்னொரு ஆரம்பத் தலையீட்டுத் திட்டத்திற்கு நான் சென்றாலோ அல்லது மாறினால் என்னாகும்**?"*

உங்கள் குடும்பத்தின் அளவு, வருமானம் மற்றும் காப்பீட்டை பற்றிய தகவல்களை புதிய EI திட்டத்திற்கு நீங்கள் வழங்க வேண்டும், மேலும் உங்கள் பொது அல்லது தனியார் காப்பீடு புதிய திட்டத்தின் சேவைகளுக்கு வழங்க உதவ ஒப்புதல் வழங்க வேண்டும்.